மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.01/2015

1. மாரியம்மாள்
2. கிருஷ்ணவேணி ... மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள்

/எதிராக/

எம். லஷ்மி ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 07.04.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.மணிகண்டஜெயகுமார் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

6 ம்மனுதாரரின் மகளான 7 ம்மனுதாரரின் குழந்தை பேறுக்காக உடனிருக்க வேண்டியிருந்ததால் 10.09.2015 ல் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே 10.09.2015 ம் தேதியன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

7ம்மனுதாரர் குழந்தை பேறுக்காக உடனிருக்க வேண்டியிருந்ததால் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என கூறப்பட்டுள்ளது தவறு. அதற்கான எந்த வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், எந்த தேதியில் எங்கு குழந்தை பிறந்தது என்பதை கூறாத நிலையிலும், 6 ஆண்டுகள் கழித்து வழக்கு பட்டியலிடப்படுவதை பார்த்துக் கொண்டிருந்து விசாரணையை காலதாமதப்படுத்த தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் தரப்பில் 6ம்மனுதாரரின் மகளான 7ம்மனுதாரரின் குழந்தை பேறுக்காக உடனிருக்க வேண்டியிருந்ததால் 10.09.2015ல் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை எனவும், எனவே 10.09.2015ம் தேதியன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 7ம்மனுதாரர் குழந்தை பேறுக்காக உடனிருக்க வேண்டியிருந்ததால் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என கூறப்பட்டுள்ளது தவறு எனவும், அதற்கான எந்த வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை எனவும், எந்த தேதியில் எங்கு குழந்தை பிறந்தது என்பதை கூறவில்லை எனவும்,

6 ஆண்டுகள் கழித்து வழக்கு பட்டியலிடப்படுவதை பார்த்துக் கொண்டிருந்து விசாரணையை காலதாமதப்படுத்த தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும் மனுதாரர்களான 6,7 பிரதிவாதிகள் கடந்த 10.09.2015 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. ஆனால் 10.09.2015 ல் ஒருதலைப்பட்ச தீர்ப்பானதற்கு பின்னிட்டு ஆறு வருடங்கள் கழித்துதான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிறது. இருந்தபோதும் இவ்வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர்கள் இவ்வழக்கில் எதிர்வாதம் புரிய வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து ஆறு ஆண்டுகள் கழித்து இம்மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் ரூ.1000/—செலவுத் தொகையாக மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள்/6,7 பிரதிவாதிகள் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/— செலவுத்தொகையாக 03.06.2021 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 04.06.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம்

ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :— இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.